சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்

நாள்: 12.07.2024 <u>SC.113/2021 c/w 119/2021</u>

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | முரளிதரன் | தொழில் | : |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | | வயது | : |
| விலாசம் | : | | | |

**அ.சா.22**

---

முதல் விசாரணை

நான் கோயம்புத்துர் குப்புசாமி நாயுடு மருத்துவமனையில் 1986 முதல் 2020 வரை இருதய அறுவை சிகிச்சை நிபுணராக பணியாற்றி வந்தேன். கடந்த 13.06.2007ம் தேதி சாமி என்பவர் எங்களுடைய குப்புசாமி நாயுடு நினைவு மருத்துவமனைக்கு மருத்துவ சிகிச்சைக்கு வந்தார். அவருக்கு இருதயத்தில் 15.06.2007ல் செயற்கை வால்வு அறுவை சிகிச்சை செய்து மாற்றினோம். 15.06.2007 முதல் 21.06.2007ம் தேதி அவர் எங்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார். அவருக்கு இருதய மாற்று சிகிச்சை செய்யும்போது அதில் ரத்தம் கட்டும். அந்த ரத்தம் கட்டுவதை தவிர்ப்பதற்காக ஒரு மாத்திரை தேவைப்படும். இருதய மாற்று வால்வு செய்தபின்பு உயிர் இருக்கும்வரை மாத்திரை சாப்பிட வேண்டும். மாத்திரை சாப்பிடவில்லை என்றால் ரத்தம் வரும். பல் ஈறுகளில் ரத்தம் வரும். அந்த மாத்திரையை அளவுக்கு அதிகமாக சாப்பிட்டால் ரத்தம் வருவதற்கு வாய்ப்பு உள்ளது. Acitorm 1 mg என்ற மாத்திரையின் அளவை 1 mg-க்கு மேல் எடுத்தால் ரத்தக்கசிவு ஏற்பட வாய்ப்புள்ளது. நான் பரிந்துரைத்த மாத்திரையை அதிகம் எடுத்துக்கொண்டாலோ அல்லது குறைந்த அளவில் எடுத்துக்கொண்டாலோ அவருக்கு பிரச்சனை ஏற்படும். என்னிடம் காட்டப்படும் 10.07.2019ம் தேதிய சான்றிதழ் நான் வழங்கியது தான். அது **அ.சா.ஆ.18**. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

சாமி எங்களுடைய மருத்துவ அறிவுறுத்தலின்படி தொடர் சிசிக்சைக்கு என்னிடம் வந்தாரா என்றால் வரவில்லை. சாமி நாங்கள் பரிந்துரைத்தபடி தொடர்ச்சியாக மாத்திரை எடுத்துக்கொண்டாரா என்றால் அதை எங்களால் நேரடியாக பார்த்து சொல்ல முடியாது. ரத்தப்பரிசோதனையின்போது தான் எங்களால் ஆய்வு செய்து பிரச்சனையை கண்டுபிடிக்க முடியும். நான் சாமியை ரத்தப்பரிசோதனை செய்து அந்த ஆய்வு முடிவை பார்த்தேனா, அதை காவல் ஆய்வாளரிடம் கொடுத்தேனா என்றால் அது மருத்துவ கோப்பில் தான் இருக்கும். அதைப்பார்த்தால் தான் சொல்ல முடியும். சாமியிடம் நாங்கள் மருந்து மாத்திரைகளை தொடர்ச்சியாக எடுத்துக்கொள்ள வேண்டும் என கூறினேன். ஆனால் அதை எடுத்துக்கொடுப்பதற்கு பிறருடைய உதவி தேவைப்படும் என்ற நிலையில் அவர் இல்லை. 10 ஆண்டுகள் தொடர்ச்சியாக மாத்திரை எடுத்துக்கொள்ள வில்லை என்றாலும் மூக்கு வழியாகவும், வாய் வழியாகவும் ரத்தம் வருவதற்கு வாய்ப்பு உள்ளது என்றால் சரியல்ல.

வெவ்வேறு காரணங்கள் இருக்கலாம். நான் பரிந்துரைத்த மாத்திரையை கூடுதல் அளவு எடுத்துக்கொள்ளாவிட்டாலும் வேறு காரணங்களினால் மூக்கு மற்றும் வாய் வழியே ரத்தம் வர வாய்ப்புள்ளதா என்றால் மாத்திரை எடுக்கும்போது உடலில் வேறு பிரச்சனைகள் இருந்தால் மருத்துவ ரீதியாக ரத்தம் வர வாய்ப்புள்ளது. 10 வருட காலகட்டத்தில் வேறு இருதய பிரச்சனைக்காக வேறு மருத்துவரிடம் சென்று சிகிச்சை எடுத்தாரா என்றால் அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை.